**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.140/2018**

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01–ம் நாள் புதன்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 01.11.2023 | தந்தை/கணவர் பெயர்: | ஆறுமுகம் |
| பெயர்: | சுப்ரமணியன் (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | நிம்மேலி | சமயம்: | |
| சாதி: | | வயது : | 49 /2023 |
| தொழில்: | | | |

__முதல் விசாரணை : 01.11.2023.__

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

30.06.1951 தேதியிட்ட நடேசன் அவர்களுக்கு அலமேலு அம்மாள் எழுதி கொடுத்த கிரய பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 31.03.1998 தேதியிட்ட ஆறுமுகம் மற்றும் வெங்கட்ராமன் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சொத்தில் உள்ள

வீட்டிற்கு செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3.வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது**.(எண்ணிக்கை -2)

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.